1972 டிசம்பர் 7]

திரு ஆர். பொன்னப்ப நாடார் : பாம்பே-கன்னியாகுமரி ரோடு திட்டப் படி இந்தப் பாலம் முக்கியமாக ஏற்படவேண்டும். அன்றிருந்த திருவாங் கூர்-கொச்சி அரசு இதைத் திட்டமிட்டது. அந்தத் திட்டத்தின் அடிப் படையில் இதைப் பற்றி ஆய்வு செய்வதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தச் சாலையைப் பொறுத்தவரையிலே இப்பொழுது கிராமச் சாலையாகக் கருதப்படுகிறது. இதற்கு ஆகக்கூடிய செலவு, நில ஆர்ஜிதம் உட்பட, ரூ. $22\frac{1}{2}$ லட்சம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை செண்டிரல் ரோடு பண்டு ஸ்கீமின்கீழ் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசிடம் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இது இந்த ஆண்டு செண்டிரல் ரோடு பண்டு ஸ்கீமில் சேர்க்கப்படவில்லை. அடுத்த ஆண்டு இதைச் செண்டிரல் ரோடு பண்டு ஸ்கீமில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

Cultivation of barley.

*77 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal to cultivate barley in Nilgiris and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் :

(அ) ஆம்.

(இ) நீலகிரி மாவட்டத்தில் பார்லி தற்போது சிறு பகுதியில் பழமை யான முறையில் பயிரிடப்படுகின்றது. அதனால் அம் முறையில் கிடைக்கும் ஆதாயம் குறைவாக உள்ளது. பார்லி பயிரிடுவதில் நவீன முறை களையும் முனைப்பான நடைமுறைகளையும் பின்பற்றுவதன் மூலம், பார்லி உற்பத்தியை அதிகப்படுத்தவும் அதிகப் பரப்பளவில் பார்லி பயிரிடவும் வகை செய்யும் செயற்குறிப்பு ஒன்று உள்ளது.

திரு எம். தேவராஜன் : இந்த பார்லியைக் கொண்டு நல்ல பீர் காய்ச்ச முடியும். உதகையில் கேட்டிக்கு அருகில் ஏற்கெனவே ஒரு தொழிற்சாலை இருந்தது. அதைப் போல ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: நீலகிரியில் பார்லி தொழிற் சாலே அமைப்பதால் அது மால்ட் உற்பத்தி செய்வதற்குப் பயன்படும். பார்லிக்கு நல்ல தேவை இருப்பதால் அதை அதிக அளவில் பயிரிடு வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. கு. அ. பொம்மன் : இது இண்டோ-ஜெர்மன் திட்ட அடிப் படையில் சேர்க்கப்பட்டிருக்கிறதா அல்லது விவசாயத் துறையிலே சேர்க்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் : தனிப்பட்ட முறையில் தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு கே. கந்தசாமி : உதகையில் பார்லி பயிரிர்செய்வதைப் போல கொடைக்கானலில் பயிர் செய்வதற்கு அரசு முயலுமா ? அதற்கு ஏதாவது செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பரிசீலனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திருமதி வி. ப. பழனியம்மாள் : பார்லி தமிழ்நாட்டில் எங்கெங்கே பயிர் செய்யப்படுகிறது ? இன்னும் எங்கே பயிர் செய்வதற்குரிய தகுதியான நிலங்கள் இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் : நீலகிரி பகுதியில் இப்பொழுது பயிர் செய்யப்படுகிறது. கொடைக்கானல் பகுதியில் பயிர் செய்ய திட்டம் உள்ளது. மற்ற பகுதிகள் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறோம்.

திரு ஏ. எம். இராஜா : துணைத் தலைவரவர்களே, இந்த பார்லி பயிரிடுவதிலும் "ஹை ஈல்டிங் வரைட்டி" பயன்படுத்தப்படுகிறதா ? அல்லது பழைய முறையிலேதான் பயிரிடப்படுகிறதா ? மேலும் மலைப் பிரதேசங்களில்தான் பார்லி பொதுவாகப் பயிரிடப்பட்டு வருகின்றன. அதைச் சமவெளிப் பகுதிகளிலும் பயிரிட அரசாங்கம் முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, பெரும்பாலும் தற்போது மலைப் பகுதிகளில்தான் பார்லி பயிரிடப்பட்டு வருகிறது. அதிலும் மற்றப் பயிர்வகைகளைப்போல் வீரிய வித்துக்களைப் பயன்படுத்த அரசு தீவிர முயற்சி எடுத்து வருகிறது. இந்த ஆண்டு 35 டன் வீரிய விதை உற்பத்தி செய்ய வேண்டுமென்று திட்டம் வகுத்து செயல்பட்டு வருகிறோம். பயிரிடும் முறையிலும் பழைய முறையை மாற்றிய புதிய முறையில், நவீன முறையில் பயிர் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக தரிசு நிலங்கள் பயன்படுத்தப்படுவதற்கு முயற்சி செய்யப்படுகிறது. நவீன முறையில் பயிர் செய்வதற்கு வேண்டிய வகையில், விவசாயிகளுக்கு வீரிய வித்துக்கள், தேவையான உரம், முதலியவற்றை வழங்கி, பயிரிட வேண்டிய முறைகளையும் விளக்கிச் சொல்ல ஏற்பாடு செய்து வருகிறது.

Fair Price Shops.

*78 Q.—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Food be pleased to state whether it is a fact that fair price shops have been opened in all the districts to distribute rice and other essential articles?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : கட்டுப்படியாகும் விலைகளில் அரிசியும், சர்க்கரையும் பொதுமக்களுக்கு வழங்குவதற்காக, சென்னை மாநகரிலும் (சிங்காநல்லூர் நகராட்சிப் பகுதியிலும் பேரூர் ஊராட்சி ஒன்றியம் உட்பட) கோயம்புத்தூரிலும் நியாயவிலைக் கடைகள் திறக்கப்